# முத்தமிழ்க் கலைஞர்

# கருணாநிதி



நாகை விஜயபாரதி

Scanned by CamScanner

# டாக்டர் தமிழினக்காவலர்
# கலைஞர் கருணாநிதி

கலைஞர் மு.கருணாநிதி கலை, அரசியல், இலக்கிய வரலாற்றில் பல வெற்றிகளைப் பெற்று மாபெரும் சாதனைகளைப் புரிந்து கொண்டிருக்கும் மகத்தான மனிதராகப் போற்றப்படுகிறார்.

பதினான்கு வயதில் அரசியலுக்கு வந்து ஐந்து முறை முதலமைச்சராகப் பொறுப்பேற்று ஏழை எளியவர்களுக்கு மட்டுமல்லாமல் தமிழக மக்களுக்குப் பல்வேறு நன்மைகளை வழங்கியிருக்கிறார்.

திருவள்ளுவர் சிலையும், வள்ளுவர் கோட்டமும் அண்ணா நூலகமும் காலமெல்லாம் அவரது புகழை எடுத்துக் கூறும் வரலாற்றுச் சின்னமாக விளங்கி வருகிறது.

கலைஞர் ஐந்தாவது முறையாக தமிழ்நாட்டின் முதல் அமைச்சராக பதவி ஏற்றவுடன் கிலோ அரிசி இரண்டு ரூபாய் என, இந்திய வரலாற்றில் யாரும் செய்திறாத வகையில் ஆணை பிறப்பித்தார்.

Scanned by CamScanner

# கலைஞர் கருணாநிதி

## கலைஞரின் இளமைப் பருவம்

வாழ்வு மூன்று எழுத்து
வாழ்விற்கு தேவையான பணம் மூன்று எழுத்து
பண்பிலே பிறக்கும் அன்பு மூன்று எழுத்து
காதல் விளைவிக்கும் வீரம் மூன்று எழுத்து
வீரம் சொல்லும் களம் மூன்று எழுத்து
களத்திலே பெறும் வெற்றி மூன்று எழுத்து

உணர்வு பூர்வமான இந்த வசனங்களுக்கு வடிவம் கொடுத்த சிறந்த சிந்தனையாளராக, எழுத்தாற்றல் மிக்கவராக, பேச்சாற்றால் மிக்கவராக அரசியலிலும் திரைத்துறையிலும் சாதனை புரிந்து வருபவர் கலைஞர் மு.கருணாநிதி அவர்கள்.

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள திருக்குவளை என்னும் கிராமத்தில் 1924ம் வருடம் ஜுன் மாதம் 3ம் தேதி முத்துவேலருக்கும் அஞ்சுகம் அம்மையாருக்கும் கலைஞர் மூன்றாவது பிள்ளையாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் தட்சிணாமூர்த்தி.

Scanned by CamScanner

கலைஞரின் பெற்றோர்கள் கலைஞரின் ஐந்தாவது வயதில் பள்ளியில் சேர்த்தனர். பள்ளிக்குச் சென்றுவிட்டு வந்து வீட்டில் நண்பர்களோடு சேர்ந்து நாடகம் போடுவார்.

தனது பிறந்த ஊரான திருக்குவளையில் தொடக்கப் பள்ளி படிப்பை முடித்துவிட்டு திருவாரூர் சென்று உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார்.

சுயமரியாதை இயக்கத்தில் முக்கியப் பேச்சாளராகத் திகழ்ந்த பட்டுக்கோட்டை அழகிரிசாமியின் பேச்சால் மிகவும் கவரப்பட்டார் கலைஞர். தனது 14வது வயதில் சமூக இயக்கங்களில் ஈடுபட்டார். நண்பர்களுடன் சேர்ந்து இளைஞர் மறுமலர்ச்சி அமைப்பைத் தோற்றுவித்தார். இந்தி எதிர்ப்பு போராட்டத்தின் மூலம் அரசியலில் தீவிரமாக ஈடுபட்டார். இளைஞர் அணியை தமிழ்நாடு மாணவர் மன்றம் என்ற பெயரில் 1940இல் தோற்றுவித்து சமூகப் பணிகளிலும் விழிப்புணர்வு பணியிலும் தீவிரமாக செயல்பட்டார்.

தமிழ்நாடு மாணவர் மன்றத்தில் பேசுவதற்காக பேராசிரியர் க.அன்பழகன், கே.ஏ.மதியழகன் ஆகியோரை அழைத்து வந்தார். இந்நிகழ்ச்சியை நடத்த நிதி பற்றாக்குறை ஏற்படவே தன் கைச்சங்கிலியை அடகு வைத்து சமாளித்தார்.

மாணவர்களிடையே எழுத்தாற்றலைச் சிறப்பாக வளர்க்க ‘மாணவ நேசன்’ என்னும் மாத இதழை கையெழுத்து இதழாகத் தொடங்கி நடத்தினார்.

இளம் வயதிலிருந்தே கவிதையில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த கலைஞர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனிட

Scanned by CamScanner

மிருந்து வாழ்த்துக் கவிதையைப் பெற்று மன்றத்தில் அனைவருக்கும் படித்துக் காட்டினார்.

'முரசொலி' என்னும் பத்திரிகையை கலைஞர் தன்து பத்தொன்பதாவது வயதில் தொடங்கினார். தந்தை பெரியார் கலைஞரின் முரசொலியைப் படித்துவிட்டுப் பாராட்டினார்.

## கலைஞரின் திருமண வாழ்க்கை

கலைஞருக்கு 1944ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11ம் நாள் திருமணம் நடந்தது. மனைவியின் பெயர் பத்மாவதி. சீர்திருத்த முறையில் திருமணம் நடந்தது.

கலைஞரின் மனைவிக்கு பேறுகால சமயத்தில் மிகுந்த காய்ச்சல் ஏற்பட்டது. குழந்தை பிறந்து மருத்துவமனையிலிருந்து வீட்டிற்குச் சென்ற பின்பு அவருடைய உடல்நிலை மிக்வும் பாதித்தது. அப்போது கலைஞர் புதுக்கோட்டையில் நடந்த ஒரு கூட்டத்தில் பேசச் சென்றிருந்தார். கூட்டம் முடிந்து வீடு திரும்பு வதற்குள் அவரது மனைவி காலமானார்.

கலைஞர் தயாளு அம்மையாரை 1948ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15ம் நாள் மணந்து கொண்டார். இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்து கொண்ட பின்னரே கலைஞர் மணமேடைக்கு வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

கலைஞரின் புதல்வர்களான திரு.மு.க.ஸ்டாலின் தமிழ்நாடு உள்ளாட்சித் துறை அமைச்சராகவும் தமிழ்நாடு முதல் துணை முதலமைச்சராகவும் பணி ஆற்றினார். திரு.மு.க.அழகிரி மத்திய ரசாயன

Scanned by CamScanner

## ஐந்துமுறை முதல்வர்

கலைஞர் சட்டசபை தேர்தலில் போட்டியிட்ட தொகுதியும் வருடமும்

| வருடம் | தொகுதி |
|---|---|
| 1957 | குளித்தலை |
| 1962 | தஞ்சாவூர் |
| 1967 | சைதாப்பேட்டை |
| 1971 | சைதாப்பேட்டை |
| 1977 | அண்ணா நகர் |
| 1980 | அண்ணா நகர் |
| 1989 | துறைமுகம் |
| 1991 | துறைமுகம் |
| 1996 | சேப்பாக்கம் |
| 2001 | சேப்பாக்கம் |
| 2006 | சேப்பாக்கம் |
| 2011 | திருவாரூர் |
| 2016 | திருவாரூர் |

கலைஞர் மு.கருணாநிதி 1957ம் ஆண்டிலிருந்து தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், நாற்பது ஆண்டுகளாக தி.மு.க.வின் தலைவராகவும் பதவி வகித்து வருகிறார். கலைஞர் தமிழ்நாட்டில் முதலமைச்சராக ஐந்துமுறை பதவி வகித்துள்ளார்.

Scanned by CamScanner

அறிஞர் அண்ணாதுரை மறைவுக்குப் பின்

1969-1971 - முதல் முறை ஆட்சி புரிந்தார்
1971-1976 - இரண்டாவது முறை
1989-1991 - மூன்றாம் முறை
1996-2001 - நான்காம் முறை
2006-2011 - ஐந்தாம் முறையாக ஆட்சி புரிந்தார்.

## கலைஞரின் படைப்புகள்

**கலைஞர் கதை வசனம் எழுதிய மேடை நாடகங்கள்:**

சிலப்பதிகாரம், மணிமகுடம், ஒரே ரத்தம், பழனியப்பன் தூக்குமேடை, வெள்ளிக்கிழமை, உதயசூரியன், காகிதப்பூ, நானே அறிவாளி, நச்சுக் கோப்பை.

**கலைஞர் எழுதிய புத்தகங்கள்:**

நெஞ்சுக்கு நீதி, தொல்காப்பிய உரை, குறளோவியம், சங்கத்தமிழ், வெள்ளிக்கிழமை, பொன்னர் சங்கர், ரோமாபுரிப் பாண்டியன், திருக்குறள் உரை, தென்பாண்டிச் சிங்கம், இனியவை இருபது, மேடையில் வீசிய மெல்லிய பூங்காற்று.

**கதை-வசனம் எழுதிய திரைப்படங்கள்:**

மனோகரா, மந்திரி குமாரி, கண்ணம்மா, மண்ணின் மைந்தன், பராசக்தி, புதிய பராசக்தி, பாலைவன ரோஜாக்கள் நீதிக்குத் தண்டனை, பாசப்பறவைகள், பாடாத தேனீக்கள், உளியின் ஓசை, பூம்புகார், இளைஞன்.

Scanned by CamScanner

## கலைஞர் புரிந்த சாதனைப் பட்டியல்

- ★ பொது மக்களின் குறைகளைப் போக்கும் வகையில் மனுநீதித் திட்டத்தைத் தொடங்கினார்.
- ★ பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லம், கண்ணொளித் திட்டம், இலவச அறுவை சிகிச்சை திட்டம் போன்றவை அறிமுகப்பட்டது.
- ★ தொழுநோயாளிகளுக்கு மறுவாழ்வு, திட்டத்தைக் கொண்டு வந்தார்.
- ★ பாஞ்சாலங்குறிச்சியில் உள்ள கட்டபொம்மன் கோட்டையை புதுப்பிக்க ஆணை பிறப்பித்தார்.

Scanned by CamScanner

★ தாய்மொழி வாழ்த்தாக 'நீராரும் கடலுடுத்த' என்ற பாடலை தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலாகக் கொண்டு வந்தார்.

★ தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தை ஏற்படுத்தினார்.

★ வள்ளுவர் கோட்டம் கலைஞரின் சீரிய முயற்சியால் அமைக்கப்பட்டது.

★ பொது மக்களுக்கு இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகளை வழங்கினார்.

★ எரிவாயு அடுப்புக்காக வழங்கப்பட்ட கூட்டுறவு கடனை ரத்து செய்தார்.

★ ஏழைப் பெண்களுக்குத் திருமண நிதி உதவித் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

★ 'குடிசை மாற்று வாரியம்' அமைத்து குடிசைவாழ் மக்களை அடுக்குமாடிக் குடியிருப்பில் குடியேற்றினார்.

★ தாழ்த்தப்பட்டோருக்கும், மீனவர்களுக்கும் இலவச மாடி வீடுகளைக் கட்டிக் கொடுத்தார்.

★ இந்தியாவிலேயே முதன்முதலாக போலீஸ் கமிஷன் அமைத்து காவல் துறையினரின் சீருடை, பணி, ஊதியம் ஆகியவற்றை சீர்திருத்தி அமைத்தார்.

★ வருமுன் காப்போம் திட்டம், வாழ்ந்து காட்டு வோம் திட்டம் போன்றவைகளை அறிமுகப்படுத் தினார்.

Scanned by CamScanner

- ★ கருவுற்ற தாய்மார்களுக்கு நிதி உதவி வழங்கினார்.
- ★ ஓட்டுநர்களுக்காக சிறப்புப் பயிற்சி அளிக்க கும்மிடிப்பூண்டியில் பெரிய அளவில் மைதானம் அமைக்க ஏற்பாடு செய்தார்.
- ★ விவசாயிகளுக்கு கூட்டுறவு கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தார்.
- ★ நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு இலவசமாக நிலம் வழங்கினார்.
- ★ வேலையில்லா படித்த இளைஞர்களுக்கு மாதாந்திர நிதி உதவி வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தார்.
- ★ மீனவர்களுக்கு அடுக்குமாடி வீடுகள் மற்றும் குடிசைப் பகுதிகளில் உள்ளோருக்கு வீடுகளையும் அமைத்துக் கொடுத்தார்.
- ★ சேலத்தில் இரும்பாலை, தூத்துக்குடியில் உரத்தொழிற்சாலை, ஆலங்குளத்தில் அரசு சிமெண்ட் தொழிற்சாலை ஆகியவற்றைத் தொடங்கினார்.
- ★ அறிஞர் அண்ணா, கலைவாணர், பாரதிதாசன், எம்.ஜி.ஆர்., இராஜா சாண்டோ ஆகியோரின் பெயரில் கலைஞர்களுக்கு விருதுகள் வழங்கி உற்சாகப் படுத்தினார்.
- ★ இந்திய விடுதலை நாளில் தேசியக் கொடியை மாநில ஆளுநர் ஏற்றி வைக்கும் வழக்கத்தை மாற்றி

Scanned by CamScanner